# ஸ்ரீ அருணாசல அஷ்டகம்

1. அம்மா என்ன அதிசயம்! ஊனக் கண்ணுக்கு ஜடமான கல்மலை போல் இந்த அருணாசலம் அமர்ந்திருக்கிறது. இதன் அருட்செயல்களோ எவராலும் அறிய முடியாதவை. அறிவு தெரியாத குழந்தைப் பருவத்திலிருந்தே, அருணாசலம் என்றால் எல்லாவற்றையும் விட மிகப் பெரியதென்று என் புத்தியில் தோன்றிக் கொண்டிருந்தது. அது திருவண்ணாமலையேயாகும் என்று உறவினர் ஒருவரால் அறிவிக்கப்பட்டும், அதன் உண்மைப் பொருளை உள்ளபடி நான் அறியவில்லை. பிறகு என் அறிவை மயக்குவித்து அது என்னைத் தன்னிடத்திற்குக் கவர்ந்து கொள்ளவும், அதனருகில் வந்தடைந்தபோது இந்த அருணாசலம் சலனமற்ற மலைவடிவாக இருப்பதைக் கண்டேன்.

2. அசலமான இக்கிரி உருவைக் கண்டதும், இந்த மலையைப் பார்த்தவன் யார் என்று மனதை உள்முகப்படுத்தி விசாரித்தவுடன், பார்த்தவனாகிய அகந்தை இல்லாமல் போய் எஞ்சி நின்ற ஆன்மா விளங்கக் கண்டேன். அதைப் பார்த்தேன் என்று சொல்வதற்கு நானென்ற அகந்தை உதிக்கவில்லை. அதைக் காணவில்லை என்று சொல்வதற்கு மட்டும் மனம் எங்கிருந்து கிளம்ப முடியும்? ஆதி காலத்தில் நீயே உன் சொரூபத்தை தக்ஷிணாமூர்த்தியாய் மௌனத்தால் உணர்த்தினை. இப்போது இந்த அனுபூதி நிலையை விளங்க வைக்கும் திறமை படைத்தவன் எவன் இருக்கிறான்? இதை உணர்த்துவதற்கென்றே, ஆகாயத்திற்கும் பூமிக்குமாக ஓங்கி உயர்ந்து அருணாசலமாக பிரகாசித்து நிற்கின்றாய்.

3. அருணாசலா! என்னைப்போலவே உன்னையும் உருவமுள்ளவனாக நினைந்து உன்னை அடைய நான் அணுகவும், நீயோ இப்பிரபஞ்சத்தில் அருணாசலம் என்னும் மலைவடிவமாக இருக்கின்றாய். உனது சொரூபம் உருவமற்றது என்று தியானிப்பது, எங்கும் நீக்கமற நிறைந்த ஆகாயத்தைக் காண்பதற்கு, உலகு எங்கும் அலைந்து திரிகின்ற ஒருவனுடைய முயற்சிக்கு நிகராகும். உனது உண்மை சொரூபத்தை எண்ணமற்று உள்ளபடி உணரும்போது, சமுத்திரத்தை ஆழம் காண கடலில் மூழ்கிய சக்கரை பொம்மையின் உருவம் கரைவது போல மனம் தன் உருவத்தை இழக்கும். எனது ஆத்ம சொரூபத்தை நான் விசாரித்து அறியும்போது எனக்கென்று தனி உருவம் எது இருக்கிறது? அருணாசலம் என்னும் வானோர் புகழ் மலையாக என்றும் நீயே விளங்குகின்றாய்.

ஸ்ரீ

# அருணாசல அஷ்டகம்

(எண்சீர்விருத்தம்)

1. அறிவறு கிரியென வமர்தரு மம்மா
வதிசய மிதன்செய லறிவரி தார்க்கு
மறிவறு சிறுவய ததுமுத லருணா
சலமிகப் பெரிதென வறிவினி லங்க
வறிகில னதன்பொரு ளதுதிரு வண்ணா
மலையென வொருவரா லறிவுறப் பெற்று
மறிவினை மருளுறுத் தருகினி லீர்க்க
வருகுறு மமயமி தசலமாக் கண்டேன்.

2. கண்டவ னெவனெனக் கருத்தினு ணாடக்
கண்டவ னின்றிட நின்றது கண்டேன்
கண்டன னென்றிடக் கருத்தெழ வில்லை
கண்டில னென்றிடக் கருத்தெழு மாறென்
விண்டிது விளக்கிடு விறலுறு வோனார்
விண்டிலை பண்டுநீ விளக்கினை யென்றால்
விண்டிடா துன்னிலை விளக்கிட வென்றே
விண்டல மசலமா விளங்கிட நின்றாய்.

3. நின்னையா னுருவென வெண்ணியே நண்ண
நிலமிசை மலையெனு நிலையினை நீதா
னுன்னுரு வருவென வுன்னிடின் விண்ணோக்
குறவுல கலைதரு மொருவனை யொக்கு
முன்னுரு வுனலற வுன்னிட முந்நீ
ருறுசருக் கரையுரு வெனவுரு வோயு
மென்னையா னறிவுற வென்னுரு வேறே
திருந்தனை யருணவான் கிரியென விருந்தோய்.

4. எங்கும் விளங்கிக் கொண்டிருக்கின்ற பரம் பொருளாகிய உன்னை விடுத்து, உனக்கயலாக ஒரு தெய்வத்தைத் தேடுவது கையில் விளக்குடன், இருட்டினைத் தேடுவதற்கு சமானமாகும். சத்சித் பிரகாசமாகிய உனது உண்மையை அறிவிக்கும் பொருட்டே, ஒவ்வொரு மதத்திலும் நீ, அவ்வத் தெய்வங்களாகத் தோற்றமளிக்கின்றாய். இவ்வாறு பிரகாசிக்கும் உன்னை அறிந்து கொள்ளாதவர்கள் சூரியன் இருப்பதைக் காணமுடியாத பிறவிக் குருடரே ஆவார். ஒப்புயர்வற்ற அருணாசலம் என்னும் சுயம்பிரகாசமே! என் இதயத்தில் ஏகமாக எழுந்தருளி விளங்குவாயாக.

5. மணிகளால் ஆன மாலையினுள்ளே ஊடுருவி இருக்கும் நூலைப்போல், உயிர்களுக்கு உயிராகவும் அந்தந்த மதங்களின் தெய்வங்களாகவும் ஒருவனாகிய நீயே விளங்கிக் கொண்டிருக்கின்றாய். மாணிக்கத்தைத் தீட்டி அதன் அழுக்கை நீக்கி பிரகாசிக்கச் செய்வதைப்போல, மெய்யுணர்வை இழந்த மனத்தை, ஆத்ம விசாரம் என்னும் சாணைக் கல்லில் தீட்டினால் உனது அருட்பிரகாசம் தோன்றும். தீட்டிய மாணிக்கக் கல்லின் பிரகாசத்தைப் போல ஆத்மாகாரம் அடைந்த மனதிற்கு வேறெந்த பற்றுதலும் படிவதில்லை. புகைப்படக் கருவியிலுள்ள உருவத்தைப் பதித்துக் கொள்ளும் தகட்டின்மீது (film) சூரியஒளி பட்டுவிட்டால், பிறகு அதில் புகைப்பட உருவம் பதியுமோ? அருணாசலம் என்னும் ஒளிமலையே! உன்னைத் தவிர மனதில் பற்றக்கூடிய வேறொரு பொருள் உண்டோ?

6. இதயமென்னும் ஒரேபொருளாகிய நீ மட்டுமே உண்மையாகும். உன்னிடத்தில் உனக்கு அன்னியமல்லாத ஓர் அற்புத சக்தியினின்று உனது சித்பிரகாசத்தோடு கூடிய, அணுவைப் போன்ற அதிநுட்ப நிழல் கூட்ட நினைவுகள் தோன்றி, பிராரப்த வினையினால் இயக்கப்பட்டுத் திரைப்படக் காட்சியைப் போல, ஆத்ம பிரதிபிம்ப மனஒளியாகிய கண்ணாடியால் உள்ளிலும், கண்முதலான இந்திரியங்களின் வழியாக வெளியிலும் நாம ரூப உலக சித்திரங்கள் காணப்படுகின்றன. அருட்பிரகாச மலையே! உலகத் தோற்றங்கள் இருந்தாலும் மறைந்தாலும் உன்னைத் தவிர இவைகள் வேறல்லவே!

7. இதய மன்றத்தில் ‘நான்’ ‘நான்’ என அசல தாண்டவமிடும் அருணாசலமென்னும் எல்லையற்ற அருள் ஒளிக்கடலே! “நான்” என்று தோன்றும் - அகங்காரவடிவ முதல் எண்ணம் எழவில்லையானால் வேறு எதுவுமே இல்லை. அந்த எண்ணம் அற்றுப்போகும் வரையிலும், மற்ற எண்ணங்கள் தோன்றினால் அது யாருக்கு என்று விசாரித்தால், “எனக்கு” என்று தோன்றும். இந்த நான் என்பது எங்கிருந்து உதிக்கிறது? என்று விசாரித்து, அந்த இடத்தில் மூழ்கி இதய சிம்மாசனத்தை அடையப்பெற்றால், ஈடு இணையற்ற அருட்கொடையின் ஆணையைச் செலுத்தி, உலகனைத்தையும் அருளாட்சி புரியும் இறைவனாக நீயே திகழ்வாய். பிறகு உள்-வெளி, பிறப்பு-இறப்பு, சுகம்-துக்கம், இருட்டு-வெளிச்சம் என்று இரட்டைகளாகத் தோன்றும் யாவும் மறைந்துவிடும்.

**4.** இருந்தொளி ருனைவிடுத் தடுத்திட றெய்வ
மிருட்டினை விளக்கெடுத் தடுத்திட லேகா
ணிருந்தொளி ருனையறி வுறுத்திடற் கென்றே
யிருந்தனை மதந்தொறும் விதவித வுருவா
யிருந்தொளி ருனையறி கிலரெனி லன்னோ
ரிரவியி னறிவறு குருடரே யாவா
ரிருந்தொளி ரிரண்டற வெனதுளத் தொன்று
யிணையறு மருணமா மலையெனு மணியே.

**5.** மணிகளிற் சரடென வுயிர்தொறு நானு
மதந்தொறு மொருவனு மருவினை நீதான்
மணிகடைந் தெனமன மனமெனுங் கல்லின்
மறுவறக் கடையநின் னருளொளி மேவும்
மணியொளி யெனப்பிறி தொருபொருட் பற்று
மருவுற லிலைநிழற் படிதகட் டின்விண்
மணியொளி படநிழல் பதியுமோ வுன்னின்
மறுபொரு ளருணநல் லொளிமலை யுண்டோ.

**6.** உண்டொரு பொருளறி வொளியுள மேநீ
யுளதுனி லலதிலா வதிசய சத்தி
நின்றணு நிழனிரை நினைவறி வோடே
நிகழ்வினைச் சுழலிலந் நினைவொளி யாடி
கண்டன நிழற்சக விசித்திர முள்ளுங்
கண்முதற் பொறிவழி புறத்துமோர் சில்லா
னின்றிடு நிழல்பட நிகரருட் குன்றே
நின்றிட சென்றிட நினைவிட வின்றே.

**7.** இன்றக மெனுநினை வெனிற்பிற வொன்று
மின்றது வரைபிற நினைவெழி லார்க்கெற்
கொன்றக முதிதல மெதுவென வுள்ளாழ்ந்
துளத்தவி சுறினொரு குடைநிழற் கோவே
யின்றகம் புறமிரு வினையிறல் சன்ம
மின்புதுன் பிருளொளி யெனுங்கன விதய
மன்றக மசலமா நடமிடு மருண
மலையெனு மெலையறு மருளொளிக் கடலே.

8. கடலிலிருந்து எழுந்த மேகம் பொழிந்த நீரானது, கடலாகிய தனது இருப்பிடத்தைச் சென்றடையும்வரை தடை செய்யப்பட்டாலும் நிற்காது. அதுபோல உன்னிடத்தில் தோன்றுகின்ற ஜீவர்கள் மீண்டும் உன்னை வந்து அடையும் வரையில், பிராரப்த வினையினால் பல பிறப்புகள் எடுத்து எவ்வளவு காலம் உழன்று திரிந்தாலும் அங்கு நின்றுவிட மாட்டார்கள். உன்னை வந்தடைந்தே தீர்வார்கள். ஆகாயத்தில் எவ்வளவு காலம் எத்தனை உயரப் பறந்து திரிந்தாலும் பறவையால் அங்கு நிலைபெற முடியாது. அதுவந்து தங்குவதற்கான இடம் பூமியைத் தவிர வேறெதுவுமில்லை. அதுபோல உன்னிடத்தில் இருந்து உதித்து, உலக இன்ப-துன்பங்களில் உழலும் ஜீவர்களும், தாம் வந்த வழியை உள்முக நோக்கால் அறிந்து சென்றிட பேரின்பக் கடலாகிய உன்னை அடைந்துவிடுவார்.

*8.* கடலெழு மெழிலியாற் பொழிதரு நீர்தான்
கடனிலை யடைவரை தடைசெயி னில்லா
துடலுயி ருனிலெழு முனையுறு வரையி
லுறுபல வழிகளி லுழலினு நில்லா
திடவெளி யலையினு நிலையிலை புள்ளுக்
கிடநில மலதிலை வருவழி செல்லக்
கடனுயிர் வருவழி சென்றிட வின்பக்
கடலுனை மருவிடு மருணபூ தரனே.

## *ஸ்ரீ அருணாசல பதிகம்: நூல் வரலாறு*

*பகவான் விரூபாக்ஷ குகையில் இருந்த காலத்து (1916) ''கருணையால்'' என்ற சொல் அவரது மனதில் பல நாட்கள் ஸ்புரித்துக் கொண்டே இருந்தது. ஆகையால் அந்தச் சொல்லை வைத்து ஒரு விருத்தப் பாடலை எழுதினார். பின் எந்த முயற்சியும் இன்றியே மறுநாள் முதல் முன்பாட்டின் கடைசி பதமானது முன்போலவே மனதில் திரும்ப திரும்ப தோன்றியது. அதை வைத்து இரண்டு, மூன்று என பத்து பாடல்கள் எழுதும்வரை நிகழ்ந்தது. இவ்வாறு அருணாசல பதிகம் உருப்பெற்றது. (பிறகு மேலும் ஒரு பாடல் சேர்க்கப்பெற்று ஏகாதசமாகியது) அந்தாதியாக அமைந்துள்ள இப்பதிகம் யாரும் கேட்காமலே ஸ்ரீ பகவானது உள்ளத்தில் தானாகத் தோன்றிய சிறப்புடைத்து.*

## *ஸ்ரீ அருணாசல அஷ்டகம்: நூல் வரலாறு*

*1916-ம் ஆண்டு அருணாசல பதிகத்திற்குப் பிறகு எழுதப்பட்டது அருணாசல அஷ்டகம் ஆகும்.*

*பகவான் பதிகம் எழுதிய முறையை அறிந்த அய்யாசாமி என்பவர், பகவான் கிரிபிரதக்ஷிணத்திற்குப் புறப்படத் தயாரான போது பழனிஸ்வாமியிடம் ஒரு காகிதமும் பென்சிலும் கொடுத்தார். அப்போது அஷ்டகத்தில் ஆறு பாடல்கள் பகவானால் எழுதப்பெற்றன. நாராயண ரெட்டியார் என்பவர் அவற்றை அச்சுப் போட முன்வந்தபோது பகவான் அஷ்டகத்திற்குத் தேவையான மேலும் இரண்டு பாடல்களையும் எழுதி அவரிடம் கொடுத்தார். அவர் பதிகத்தையும், அஷ்டகத்தையும் அச்சிட்டு வெளியிட்டார். ஸ்ரீ பகவான் இயற்றிய இந்த பொருள் நிறைந்த கவிதையின் நடையைக் அக்காலத்தில் தமிழ்ப்புலவர்கள் கண்டு வியந்தனர்.*